26th October 1957]

institution will receive favourable treatment in the matter of grants as compared with other institutions, if he continues to be on the Board?

THE HON. SRI C. SUBRAMANIAM : Grants are regulated by the rules and regulations in force. Therefore, there is no question of any favour being shown to this institution. I may inform the hon. Leader of the Opposition that before I agreed to become a member of the Trust Board, the matter was placed before the Cabinet and the Cabinet considered the question in all its aspects. Considering the importance of the institution and the necessity to see that it is properly managed, the Cabinet permitted the Minister for Education to be a member of the Trust Board.

Surplus funds of Religious and Charitable Institutions

* 8 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to utilize the surplus funds of the Religious and Charitable Institutions for education and other social welfare activities?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : Is it a fact that the Tanjore Municipality has offered to surrender the entire funds outstanding on account of temples for utilization for temple and other purposes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not know what the Municipality has got to do with the temples.

SRI A. GOVINDASAMY : திருப்பதி வெங்கடேசப் பெருமாள் பேரில் ஒரு சர்வகலாசாலை இருப்பது போல், தென் பகுதியில் இருக்கும் மடாலயங்களுக்கும் கோவில்களுக்கும் உள்ள சொத்துக்களை கல்வித் துறையில் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி முடிவு செய்வதற்கு முன்பு, தற்போது வெங்கடாசலபதி தேவஸ்தானத்தில் இருக்கும் அவ்வளவு பொருள் நம் ராஜ்யத்தில் இருக்கும் தேவஸ்தானங்களுக்கு இல்லை என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்வேன்.

Indigenous systems of medicine

* 9 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have sent any proposal to Central Government for financial assistance to institutions teaching indigenous systems of medicine?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI N. K. PALANISAMI : What are the proposals, Sir?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Government have prepared and sent a scheme to the Government of India. They are awaiting a reply from them in the matter of assistance.

SRI N. K. PALANISAMI : May I know whether the Sidda, Unani and other systems of medicine will receive more facilities in the matter of teaching?

THE HON. SRI M. A. MANICKAVELU : The scheme contemplates research in all the three departments of indigenous medicine. It is for this, we have asked for help from the Centre.

SRI A. VEDARATHNAM PILLAI : நாட்டு வைத்திய முறைகளில் இயற்கை வைத்தியம் சேர்ந்திருக்கிறதா ? சேர்த்து சிபாரிசு செய்யப் பட்டிருக்கிறதா ? அப்படி இல்லையானால், காந்தீய நிர்மாணத்திட்டத்தில் இயற்கை வைத்தியமும் ஒன்றானதினாலும், அதன் மூலமாக நம் நாட்டிற்குப் பல கோடி ரூபாய் மிச்சமாகக் கூடும் என்பதாலும், இந்த வைத்திய முறையையும் ஆலோசிப்பதற்கு அரசாங்கம் சிபாரிசு செய்யுமா ? இதை எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எல்லா வைத்திய முறைகளிலும் கொஞ்சம் இயற்கை இருந்துதான் ஆகவேண்டும் ; இயற்கையின் ஒத்தாசை இல்லாமல் முடியாது. ஆகையினால் இதிலேயும் அதற்கு வகைசெய்யப்பட்டிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : நாட்டு வைத்திய முறைகளைக் குறித்த ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர், இப்போதுள்ள நாட்டு வைத்தியத் தொடர்புள்ள கல்லூரியில் (காலேஜ் ஆப் இன்டக்ரேடெட் மெடிசன்) பல துறைகளில் குறைபாடுகள் உள்ளதாகவும் அக்குறைபாடுகள் நீக்கப்பட வேண்டுமென்றும் அங்குள்ள மாணவர்கள் பல விண்ணப்பங்களை கனம் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் குறைகள் எவ்வளவு விரைவில் நீக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது சென்னையில் இருக்கின்ற இந்த காலேஜுக்குத்தான், அதிகமாக இந்த வைத்திய முறை பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவும் மற்ற வகைகளில் நாட்டு வைத்திய முறையை அபிவிருத்தி செய்வதற்காகவும்தான், நிதி ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

SRI K. VINAYAKAM : Whereas the former Minister of Health had a definite antipathy towards the indigenous system of medicine, is it a fact that the present Minister has developed an undue liking for indigenous medicine?

THE HON. SRI M. A. MANICKAVELU : I cannot say; it is for others to judge.

SRI A. A. RASHEED : நாட்டு வைத்தியத்தில் பொதுமக்கள் சிரத்தை காட்டுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON SRI M. A. MANICKAVELU : குறிப்பாக கிராமங்களில் பொதுமக்கள் நாட்டு வைத்தியத்தில் சிரத்தை காட்டுகிறார்கள் ; ஏனென்றால் அவர்களுக்கு வேறு விதி இல்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : What is the financial assistance asked for from the Centre? Can the Hon. Minister give the figures?

THE HON. SRI M. A. MANICKAVELU : The commitment for the State will be about $2\frac{1}{2}$ lakhs of rupees. We expect another three to four lakhs from the Centre.

SRI M. P. SUBRAMANIAM : உள்நாட்டு வைத்திய முறையை போதிக்கும் இந்த கல்லூரியில் ஆங்கில முறைப் பாடங்களை அதிகமாக சொல்லிக்கொடுக்கப்படுவதாக அங்குள்ள மாணவர்களின் வாயிலாக அறிகிறோம். ஆகவே, உள்நாட்டு வைத்திப முறையில் தேர்ச்சி பெற்றவர்களையும் ஆங்கில வைத்ய முறையில் தேர்ச்சி பெற்றவர்களைப்போல் பாவிக்கக் கூடாதா என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன் ?

26th October 1957]

The Hon. Sri M. A. MANICKAVELU: அவர்கள் ஓரளவுக்கு அவ்வாறு கருதப்படுகிறார்கள். ஆனால் இவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது சாதாரணமாக, முழு அளவிற்கு மேல் நாட்டு முறையில் உள்ள அளவு இல்லை. ஆனாலும் இவர்களும் ஆங்கில முறை வைத்தியர்களைப் போலவே ஆங்காங்கு நியமிக்கப்பட்டுவருகிறார்கள்.

Minimum wages

* 10 *Q*.—**Sri N. K. PALANISAMI**: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to bring in legislation to provide for minimum wages, leave facilities, guarantee of employment, etc., for the employees in cinema theatres?

The Hon. Sri R. VENKATARAMAN: No, Sir.

Sri N. K. PALANISAMI: In 1947, there was an award by Mr. Sastri but no minimum wage was fixed and no guarantee of employment was given. The workers numbering about 10 to 15 thousands have no guarantee of employment. Why not the Government bring in legislation giving minimum wage and guaranteeing employment?

The Hon. Sri R. VENKATARAMAN: Employment in cinema theatres is not one of the scheduled employments under the Minimum Wages Act. Therefore, the Act *per se* cannot apply here. It is not as if the workers have no remedy. Wherever there is an industrial dispute, such questions are referred to the Tribunal for adjudication.

Sri M. KALYANASUNDARAM: சினிமாத் தியேட்டர் தொழில் நல்ல வருமானம் கிடைக்கும் ஒரு தொழில். மற்ற தொழில்களுக்கெல்லாம் நாம் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்கும்போது இந்தத் தொழிலுக்குக் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்காமல் இருப்பது சரியல்ல. இந்தத் தொழிலுக்கும் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிப்பதற்கு, மினிமம் வேஜஸ் ஆக்ட் படி, சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. சர்க்கார் அவசியமான நோடிபிகேஷனைப் போடலாம். ஆகவே இந்தத் தொழிலையும் மினிமம் வேஜஸ் சட்டப்படி "நோடிபை" பண்ணுவதற்கு அரசாங்கத்தார் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN: மினிமம் வேஜஸ் ஆக்ட் படி, சாதாரணமாக, ரொம்பக் கஷ்டம் இருக்கும் தொழில்களுக்கு **(sweated Industries)** தான் நாம் அடிப்படைச் சம்பள விகிதம் நிர்ணயிப்போம். சினிமாத் தியேட்டர் தொழிலை அந்த மாதிரி "ஸ்வெடட் இண்டஸ்ட்ரி" என்று சொல்வதற்கில்லை. எங்கெல்லாம் தொழில் தகராறுகள் ஏற்படுகிறனவோ அங்கெல்லாம் அவைகளைப் பரிசீலனை செய்து அந்தத் தொழிலாளிகளுக்கு குறைந்த பட்சக் கூலி மாத்திரமல்லாமல் நியாயமான கூலியும் கூட நிர்ணயம் செய்யக்கூடிய நிலையில் சர்க்கார் இருக்கிறது.

Sri A. A. RASHEED: What is the total number of cinemas and what is the total number of workers in them?

Mr. SPEAKER: The hon. Member may put a separate question.